Water supply scheme to Alandur Municipality.

* 273. Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu has sanctioned a scheme of drinking water-supply to the municipality of Alandur, Chingleput district; and

(b) if so, the estimate of that scheme?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆலந்தூர் நீர்வழங்கு திட்டத்தின் முதற் கட்டம் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ. 3.52 லட்சத்திற்கு 1969-ல் செப்டம்பர் மாதத்தில் அரசினரால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

திரு கே. விநயகம் : இந்தக் குடிநீர்த் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் அந்தப் பகுதியில் சட்டசபை அங்கத்தினர் தன்னுடைய சொந்தச் செலவில் லாரி மூலம் குடி தண்ணீருக்கு வசதி செய்தாரே அது ஒரு சில நாட்கள் மட்டும் செய்யப்பட்டு பிறகு அதை விட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மைதானா? உங்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத்தரப்படும்.

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம்

* 274 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தினை தமிழகத்தில் எடுத்து விடும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்காக நமது அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு எவ்வளவு? இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்த மக்கள் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மலேரியா ஒழிப்புத் திட்டம் ஒரு தேசியத் திட்டமாகக் கருதப்படுகிறது. 1959-60இல் இந்தத் திட்டம் துவங்கப்பட்டது. நான்கு கட்டங்களில் இந்தத் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேறி வருகிறது. முதல் மூன்று கட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நான்காவது கட்டத்தில் விஜிலென்ஸ் ஸெல் என்ற முறையில் அமைத்து மேலும் பரவாமல் தடுக்கும் அத்தகைய சூழ்நிலையில் அந்தத் துறையில் இருக்கிறவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். 32 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணியாற்றி வருகிறது. அதற்காக மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகையினுடைய விவரம் இங்கில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.